In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 78/2023

Prosecution witness P.W.5

Name: Manikandan

Calling:

Father Name:

Religion:

Village:

Caste:

Taluk:

Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 02.03.2026.

**(Accused 1 and 2 present.)**

முதல் விசாரணை :-

நான் தற்சமயம் பழனி சாமிநாதபுரம் காவல் நிலையத்தில் 1ம் நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு நான் கூம்பூர் காவல் நிலையத்தில் கிரேடு 1 போலீசாராக பணிபுரிந்துவந்தபோது 26.06.2022ம் தேதி மாலை 3 மணிக்கு வத்தலப்பட்டி பஸ்ஸ்டாப்பில் நானும் என்னுடன் விவேக் கிரேடு 2 பிசி வடமதுரை காவல் நிலையம் நாங்கள் இருவரும் டுட்டி பார்த்துக்கொண்டு இருந்தோம். அப்போது TN-57-G-0697 என்ற ஈச்சர் வாகனம் ஊர்க்காவல்படையினரை ஏற்றிக்கொண்டு நடகோட்டையிலிருந்து விருவீடு நோக்கி சென்று சென்றுகொண்டிருந்தது. அந்த ஈச்சர் வண்டி வத்தலப்பட்டி பஸ்ஸ்டாப் அருகே மெதுவாக வந்து நின்றது. மேற்படி ஈச்சர் வாகனம் நின்ற உடன் ரோட்டிலிருந்து ஒரு 5 பேர் வந்து கெட்டவார்த்தையால் டிரைவர் எஸ்எஸ்ஐ பழனிச்சாமியை பார்த்து திட்டினார்கள். ஒரு இருசக்கர வாகனத்தை விபத்து ஏற்படுத்தியதாகச்சொல்லி திட்டினார்கள். மேற்படி வண்டியின் பின்பக்க கண்ணாடி மற்றும் முன்பக்க சைடு மிரர் உடைந்திருந்தது. நானும் விவேக்கும் சென்று பார்த்தோம். பொதுமக்கள் வந்து விலக்கிவிட்டார்கள். ஊர்க்காவல் படையைச்சேர்ந்த ஒரு பெண்ணிற்கு முதுகில் காயம்பட்டதாகச்சொன்னார்கள். அவர்களை அரசு பஸ்ஸில் ஏற்றி விருவீடு காவல் நிலையம் அனுப்பி

வைத்தோம். விருவீடு காவல்நிலைய சார்பு ஆய்வாளர் அங்கு வந்துவிட்டார். அவர் சொன்னதன்பேரில் நானும், விகேக்கும் ஈச்சர் வண்டியை எடுத்துக்கொண்டு விருவீடு காவல்நிலையம் எடுத்துச்சென்றோம். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

ஆய்வாளர் விசாரணையில் ஈச்சர் வாகனத்தை ஓட்டிவந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி அங்கு நின்றுகொண்டிருந்த இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல. வத்தலப்பட்டி பஸ்ஸ்டாப்பில் நானும் விவேக்கும் பணியில் இருந்தோம். 26.06.2022ம் தேதி மாலை 3 மணிக்கு ஈச்சர் வண்டி வத்தலப்பட்டி பஸ்ஸ்டாப்பிலிருந்து 50 மீட்டருக்கும் முன்னால் நின்றது. வண்டி நின்ற போது அந்த இடத்தில் கூட்டம் நிறைய கூடியது அப்போதும் நாங்கள் அங்குதான் இருந்தோம் என்றால் சரிதான். பொதுமக்கள் 5 பேர் இருந்தார்கள். ஈச்சர் வண்டி அங்கு வந்து நின்றதில் இருந்து நாங்கள் அந்த இடத்தில் 45 நிமிடம் இருந்திருப்போம். நாங்கள் அங்கு இருந்தபோது 108 ஆம்புலன்ஸ் அங்கு வந்தது என்றால் அதை நான் பார்க்கவில்லை. 108 ஆம்புலன்ஸ் 15 நிமிடத்திலேயே அந்த இடத்திற்கு வந்துவிட்டது என்றும் நாங்கள் 45 நிமிடம் இருந்தபோது கண்டிப்பாக அதை பார்த்திருக்க வாய்ப்பு உண்டு என்றும் ஆனால் இவ்வழக்கிற்காக ஆம்புலன்ஸ் வந்ததை நான் பார்க்கவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. ஈச்சர் வண்டியை காவலர் விவேக் காவல் நிலையத்திற்கு ஓட்டிவந்தார். அதில் நான் மட்டும் சென்றேன். எஸ்எஸ்ஐ பழனிச்சாமி இருக்கும்போது விவேக் ஏன் ஈச்சர் வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்றால் அவர் பதட்டத்தில் இருந்ததால் நாங்கள் ஓட்டிச்சென்றோம். காவல் நிலையத்திற்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் தெரியவில்லை. பொதுமக்கள் சொல்லியிருக்கலாம். விருவீடு காவல்நிலைய சார்பு ஆய்வாளர்

அந்த இடத்திற்கு வந்து ஈச்சர் வண்டியை காவல்நிலையம் எடுத்துவரச்சொன்னதால் நாங்கள் எடுத்துச்சென்றோம். காவலர் விவேக்கிற்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. அவர் டிரைவர்தான். சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி குடிபோதையில் இருந்ததால் அவரால் வண்டியை எடுக்க முடியாததால் விவேக் வண்டியை காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றார் என்றால் சரியல்ல. எஸ்எஸ்ஐ பழனிச்சாமி குடிபோதையில் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றும் அவரை காப்பாற்றவேண்டி அவரை பணிநீக்கம் செய்யாமல் இருப்பதற்காகவும் நாங்கள் முந்திக் கொண்டுபோய் புகாரை கொடுத்தோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை –இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.02 16:25:35 +0530

Principal District Judge,
Dindigul.